LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka

# Eastern University, Sri Lanka
## Faculty of Commerce and Management
## External Degree
## Part III Examination in Business Administration -2007/2008 (May / June 2011)
## (Proper)
## EXB 406 Research Methodology

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

"ஆய்வு என்பது தீர்வு காணப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வினை அறிவதற்காக அவற்றை முறைமையாக விசாரணை செய்வதனைக் குறிக்கின்றது"

(a) சிறந்த ஆய்வுகளின் பண்புகளை விளக்குக.

(b) இணைவு சார் (Correlational Research) ஆய்விலிருந்து விளக்க சார் ஆய்வானது (Explanatory Research) எவ்வாறு வேறுபடுகின்றது என விளக்குக.

(c) பண்பு சார் ஆய்வு (Qualitative Research) ஒன்றின் குணாதிசயங்கள் யாவை?

(d) பின்வரும் ஆய்வுத் தலைப்புகள் எவ்வகையைச் சார்ந்தது என அடையாளம் காண்க:

(i) ஊழியர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக கம்பனி ஒன்றினால் அமுல்படுத்தப்படும் தந்திரோபாயங்கள் மீதான ஆய்வு

(ii) ஊழியர்களின் உற்பத்தித் திறனின் மீது ஊக்குவிப்புக்கள் (incentives) ஏற்படுத்தும் தாக்கங்கள்

(iii) தொழிநுட்பம் வேலையின்மையை அல்லது வேலைவாய்ப்பினை எவ்வாறு ஏற்படுத்துகின்றது?

(iv) கிராமிய வறுமையை ஒழிப்பதில நுண்நிதியிடல் (Micro Financing) திட்டத்தின் செயற்றிறன்

(v) மக்களின் மனஅழுத்த மட்டத்தினை (stress level) அளவீடு செய்வதற்கான வினாக்கொத்து கருவி ஒன்றினை உருவாக்குதல்

(20 புள்ளிகள்)

LIBRAR
12 OCT 2011

2. (a) "ஆய்வுப் பிரச்சினை" மற்றும் "ஆய்வு வினாக்கள்" எனும் பதங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(b) ஆய்வுப் பிரச்சினை ஒன்றைத் தெரிவு செய்யும் போது நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை?

(c) ஆய்வு ஒன்றில் "எண்ணக்கருவாக்கம்" மற்றும் "நடைமுறையாக்கம்" என்னும் பதங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(d) கீழ் மட்ட ஊழியர்களின் உற்பத்திறன் மீது பல்வேறு வகையில் இணைந்தவாறு பயிற்சித் திட்டங்களும் ஊக்குவிப்புத் திட்டங்களும் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதனை ஆய்வு செய்ய நீங்கள் விரும்புவதாகக் கருதுக. இதனைப் பரீட்சிப்பதற்கு பொருத்தமான கருதுகோள்களை நிறுவுக.

**(20 புள்ளிகள்)**

3. (a) "ஆய்வு வடிவமைப்பு" (Research Design) என்னும் பதம் குறிப்பதை விளக்குக.

(b) கிராமப் பகுதிகளில் வாழும் மிக வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக அமுல்படுத்தப்படும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் ஒன்று அம் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வு செய்ய பொருத்தமான ஆய்வமைப்பு (Study Design) ஒன்றினை சிபாரிசு செய்து அதனை வரைபட உதவியுடன் விளக்குக.

(c) நீண்டகால ஆய்வு வடிவமைப்பின் (Longitudinal Study Design) அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஆராய்க.

(d) "குறுக்குமுக ஆய்வு வடிமைப்பு"( "Cross Sectional Study Design") என்பதனால் நீங்கள் விளங்கிக்கொள்வதென்ன?

**(20 புள்ளிகள்)**

4. (a) சமூக விஞ்ஞான ஆய்வு முறையில் அவதானம் மூலமான தரவு திரட்டல் முறை பொருத்தமானதாக அமையும் சந்தர்ப்பங்களை ஆராய்க.

(b) கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தரவு திரட்டும் முறையினை கட்டமைக்கப்படாத நேர்காணல் மூலம் தரவு திரட்டும் முறையினை வேறுபடுத்துக.

(c) "வினாக்கொத்து" மூலம் ஆய்வுத் தரவுகள் திரட்டுவதன் அநுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஆராய்க.

(d) மனப்பாங்கு அளவு கோல் என்றால் என்ன? லிக்கட் (Likert Scale) மனப்பாங்கு அளவு கோலைப்பற்றி விபரிக்குக.

(20 புள்ளிகள்)

5. (a) விகிதாசார ரீதியாக குழுவாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியமைத்தல் (Proportionate Stratified Random Sampling) முறைக்கும் விகிதாசார ரீதியற்றதாக குழுவாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியமைத்தல் (Disproportionate Stratified Random Sampling) முறைக்கும் இடையிலான வேறுபாடு யாது? உதாரணம் ஒன்றின் மூலம் அதனை விளக்குக.

(b) கோட்டா மாதிரியமைத்தல் (Quota Sampling) முறையின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(c) ஆய்வுகளில் தரவு பகுப்பாய்வினை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான புள்ளிவிபர முறைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(d) ஆய்வு முன்மொழிவு ஒன்றில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)